## NEWS CLIPPING

Headline: **Reading Corners by GAB Foundation**

Publication : **Msia Nanban**

Section : **-**

Page : **-**

Date : **12 November 2011**

ஈப்போ ஸ்ரீ புத்ரி இடை நிலைப் பள்ளிக்கு ஜி.ஏ.பி. அறவாரியம்

# 25 மடிக்கணினிகள் அன்பளிப்பு




** பள்ளிக்கு வழங்கப்பட்ட மடிக் கணினிகள்

(ப.சந்திரசேகர்)

ஈப்போ, நவ. 12–

ஸ்ரீ புத்ரி இடைநிலைப்பள்ளிக்கு ஜி.ஏ.பி. அறவாரியம் 25 மடிக்கணிகளை அன்பளிப்பாக வழங்கியது.

புயல் மழை காரணமாக இப்பள்ளியின் கணினி அறை பாதிப்புக்குள்ளானதைத் தொடர்ந்து பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கணினி அறையை புதுப்பித்து தந்ததோடு ஜி.ஏ.பி. அறவாரியத்துடன் தொடர்பு கொண்டு மடி கணினிகளை பெற்றுக் கொடுத்துள்ளது.

மடி கணினி வழங்கும் நிகழ்ச்சி பள்ளியில் நடைபெற்றது. பேரா மஇகா





தலைவரும் பேரா மந்திரி புசாரின் சிறப்பு செயலாளர் டத்தோ எஸ்.வீரசிங்கம், புந்தோங் சட்டமன்ற தேசிய முன்னணி ஒருங்கிணைப்பாளர் எஸ். ஜெயகோபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளி தலைமை ஆசிரியர் ஹாஜா ரோபா னியா இவ்வுதவிகள் செய்த பேரா அரசுக்கும் ஜிஏபி அறவாரியத்திற்கும் நன்றியைத் தெரி வித்துக் கொண்டார்.

பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஏகாம்பரம் துணைத் தலை வர் நடராஜா செயற்குழு வினருக்கும் நன்றியைத் கூறிக் கொள்வதாக தெரிவித்தார்.

பேரா மஇகா நிலக்குழு துணைத் தலைவர் செல்வ கணேசன் ஜேம்ஸ் உட்பட மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.